**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**SESSION CASE NO.106/2023**

2025 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 21 ஆம் நாள் திங்கள் கிழமை

அ.சா.12 (பட்டியல் சாட்சி–14) இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | டாக்டர்.பரமேஸ்வரி | த/பெ.: | பொன்னுசாமி |
| கிராமம்: | கரூர் | தாலுக்கா: | கரூர் |
| மதம்: | இந்து | தொழில்: | மருத்துவர், அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை, கரூர். |
| வயது: | 47 | முகவரி: | கரூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 21.07.2025

**முதல் விசாரணை :–**

நான் தற்போது கரூர், அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் அவசர சிகிச்சைப்பிரிவில் மருத்துவராக பணியாற்றி வருகிறேன். 14.02.2022–ல் மாலை 06.55 மணியளவில் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப்பிரிவில் பணியில் இருந்தபோது மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்ட திருத்துறைப்பூண்டி, பாமணியைச் சேர்ந்த சந்தியா என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். அவரை நான் பரிசோதனை செய்ததில் அவருக்கு இதயத்துடிப்பு இல்லை. சுவாசிக்கவில்லை. அவருக்கு உடம்பில் உயிர் இல்லை என ஊர்ஜிதம் செய்து மருத்துவமனை சவக்கிடங்கிற்கு சந்தியாவின் உடலை அனுப்பி வைத்தேன். பின்னர் இறந்துபோன சந்தியாவின் இறப்பை குறித்து கண்டறிய திருவாரூர் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக சந்தியாவின் பிரேதத்தை திருவாரூருக்கு அனுப்பி வைத்தேன். சந்தியா என்பவர் இறந்துவிட்டார் என நான் வழங்கிய விபத்துப்பதிவேடு நகல் **அ.சா.ஆ.5** ஆகும். நான் சந்தியாவை கொண்டுவந்த நபரான சங்கர் என்பவரை

விசாரணை செய்தபோது 06.30 மணியளவில் சந்தியா என்பவர் தற்கொலை செய்து கொண்டதாக அவரை மருத்துவமனைக்கு கொண்டு வந்ததாகவும் என்னிடம் தெரிவித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்துள்ளார்.

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.